விடியல்

அழகிற்கே அழகு சேர்க்கும்
அழகிய இயற்கையின்
அற்புதமான அழகு
'விடியல்'.

மாலை பொழுது
மயங்கி
நிலா வந்து போன பின்பு

வரும் விடியல்
மிகவும் பிரம்மாண்டமானது
ஒவ்வொரு விடியலும்
ஒவ்வொரு மனிதர்களுக்கும்
ஒரு உற்சாகமான
நாளை பரிசளிக்கின்றது.
விடியல் இல்லா நாளை
விழிகளில் கனா காணா
மனிதர்கள் தயங்குவார்கள்
வானம் விடியும் போது

எழும் பறவைகளின்
நாதஸ்வர ஓசையை
வெல்ல எந்த வித்வானுக்கும் இயலாது
வெற்றிகளை நோக்கி செல்லும்
ஒவ்வொரு விடியலும் மிக மிக
பொலிவானது
சூரியன் குங்கும தளிகை போல்
உதித்து வரும் காட்சி
அழகுக்கே அழகை கூட்டுகின்றது
விடியல் என்பது விண்ணில் நடக்கும்
வினோத விளையாட்டு
விடியல் பொழுது
விஸ்மயமான பொழுது
அழகிய கண்ணனின் புல்லாங்குழல் ஓசை
போலெழும் பறவையின் ஓசை
மரங்கள் மனித மனதை
கொள்ளையடிக்கும் அழகில்
விடியலோடு சேர்ந்து எல்லோரையும்
ஆச்சரிய படுத்துகின்றது
அகிலத்தின் அழகு

പ്രോഗ്രാം കമ്മിറ്റി

விடியலில் உள்ளது
இருட்டடைந்து போன
இரவை மங்களகரமாக்க
கடவுளின் திருவிளையாடல் தான்
'விடியல்....

விடியலில்லையென்றால் மனித
வாழ்க்கையில் விடியலில்லை
வர்ண ஜாலமான
விடியல் எல்லோர்
மனதிலும் இடம் பிடித்த
அற்புதம்...
ஒவ்வொரு மனித நெஞ்சை
கொள்ளையடித்தது இயற்கையின்
'விடியல்"

விடியல் பொழுதில்
புல்லின் மேலிருந்து விலகி
செல்லும் பனித்துளிகள் எல்லாம்
ஆசை ஆசை மீண்டும்
மீண்டும் ஆசை விடியலை காண.
விடியல் பொழுதில் சின்னதாய்
வீசும் இளம் காற்றை

யார் வேண்டாம் என்று
சொல்வார்கள்.
சுதந்திர உலகின்
சுதந்திரம் தான் 'விடியல்'

விடியல் மீது ஆசை
விடியலோடு சேர ஆசை
விடியலை காண ஆசை

மனித நெஞ்சை தன்
கைக்குள் வைக்கின்றது விடியல்.
விடியல் விடியல் விடியல்.....